<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.17**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துபாண்டி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 22-10-2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெள்ளக்கோவில் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்தபோது மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/2018, சம்பந்தப்பட்ட அடையாளம் தெரியாத ஆண் பிணத்தை கோவை அரசு மருத்துவக் கல்லூரியில் ஒப்படைப்பதற்கு மூலனூர் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் ஒன்றை கொடுத்தார். அதை 23.10.2018 அன்று இரவு 23 மணிக்கு பெற்று மேற்படி பிரேதத்தை 24.10.2018 காலை 02:35 மணிக்கு கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்தேன். இது தொடர்பாக 4.2.2019 ம் தேதி அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னிட்டு 25.2.2019 ஆம் தேதி மேற்படி ராமு என்பவர் இது தொடை எலும்பை டி.என்.ஏ பரிசோதனைக்காக சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். மேலும் அவர்களது குடும்பத்தாரின் ரத்த மாதிரியை சேகரிக்கும் பொருட்டு தடய அறிவியல் துறையிலிருந்து கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 22.7.2019 ஆம் தேதி இறந்து போன ராமின் குடும்பத்தாரின் ரத்த மாதிரி சேகரித்ததை சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் டி.என்.ஏ பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். பின்னிட்டு, 16.09.2019 ஆம் தேதி சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து மேற்படி டிஎன்ஏ டெஸ்ட் காண அறிக்கை பெற்று நீதித்துறை நடுவர்

நீதிமன்றம், தாராபுரத்தில் ஒப்படைத்தேன். 22.07.2019ம் தேதியிட்டட நீதித்துறை நடுவர் நீதிமன்ற கடிதம் **அ.சா.ஆ.19** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கவிதா மற்றும் சங்கர் ஆகியோரிடம் ரத்த மாதிரி சேகரித்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் அவ்வாறு நான் ஆய்வாளரிடம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியில்ல.

சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து மேற்படி பரிசோதனையின் முடிவு அடங்கிய அறிக்கையை நான் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது தவறான நடைமுறை என்று சொன்னால் சரியல்ல மேற்படி அறிக்கை நம்பத்தகுந்ததல்ல என்று சொன்னால் சரியில்லை

**2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:57:42 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.